**வீட்டு வன்முறை என்றால் என்ன?**

வீட்டு வன்முறை உலக அளவில் அதிகம் பரந்துள்ளதுடன் நாளாந்தம் மனித உரிமை களை பாதிக்கின்றது. இது வன்முறைகளை பல வடிவங்களில் உள்ளடக்கி, தற்போதும் தொடரும் அல்லது ஏற்கனவே பிளவுபட்ட தம்பதிகளின் உறவுகளில், அத்துடன் குடும்ப உறவுகளில் பெரியோர்களுக்கும் பிள்ளை களுக்கும் அல்லது பெரியோர்களுக்கும் முதியோர்களுக்கும் இடையில் அல்லது அங்கவீனமாக மக்களுக்கு ஏற்படுகின்றது. இது திருமணமானவர்கள் மற்றும் திருமண மாகாத சோடிகளில் ஏற்படுகின்றது, குடும் பங்களில் மற்றும் ஒன்று சேர்ந்து வாழும் இடங்களிலும் ஏற்படுகின்றது.

ஆணித்தரமாக இதன் அர்த்தம் என்னவென்றால்:

- பயமுறுத்துதல், பழித்தல், திட்டுதல், வெருட்டுதல்
- எதிரே உள்ள பொருட்களை வீசி எறிதல், மோதுதல் குலுக்குதல், முகத்தில்அடித்தல், கடித்தல், திருகுதல், காலால் உதைத்தல், முகத்தில் குத்துதல்
- ஆயுதத்தைப் பாவித்தல்
- பாலியலுக்கு வற்புறுத்தல்
- குடும்பத் தொடர்புகள் மற்றும் வெளித் தொடர்புகளை கண்காணித்தல் அல்லது தடைசெய்தல்
- வீட்டில் தடுத்து வைத்தல்
- வீட்டுச் செலவுக்கு பணம் கொடுக்காதிருத்தல்
- பிரிந்த பிறகும் வேவுபார்த்தல், பின்தொடர்தல், நிழல்போல் தொடருதல்
- துன்புறுத்தல் (தொலைபேசியில், தபால் போன்றவைகளில்)
- திருமணத்திற்கு வற்புறுத்தல் (இளைஞர் மற்றும் இளவயதுள்ள பெரியோர்கள்)

---

**யார் இதில் பாதிப்படைகின்றனர்?**

அநேக வேளைகளில் பெண்களே வீட்டு வன்முறையில் பாதிக்கப்படுகின்றனர். சுவிசில் ஒவ்வொரு ஐந்தாவது பெண்ணும் தனது துணைவர்களால் வன்முறையை அனுபவிக்கின்றனர். ஆண்களும் வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட முடியும். பல சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தமது குடும்பத்தில் உள்ள வீட்டு வன்முறையால் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

குடும்ப வன்முறை அனைத்து கல்விமான்கள் மற்றும் எந்தவிதமான வருமானம் உள்ள வர்களிலும் ஏற்படுகின்றது, இது அனைத்து வயதுள்ளவர்களிடமும் இருப்பதுடன், எந்த பிரஜாவுரிமையோ, மதமோ அல்லது கலாச் சாரம் இருந்தாலும் இது ஏற்படுகின்றது.

---

**வீட்டு வன்முறைக்கு விளைவுகள் உண்டு**

வன்முறையான உறவுகள் அதிக வேளை களில் நீடித்துச் செல்வதுடன் பாதிக்கப் படுபவர்கள் தமக்கான உதவிகளைத் தேடிக்கொள்வதையும் கடினமாக்குகின்றது. பாதிக்கப்படும் அதிகமானவர்கள் தனிமையை உணர்வதுடன், இந்த நிலை மைக்காக வெட்கப்படுவதுடன் மேலும் வன்முறை இடம்பெறலாம் எனப்பயப்படு கின்றனர். வன்முறையை நிறுத்துவதாக கொடுக்கப்படும் வாக்குறுதிகள் அதிகமாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. வீட்டு வன்முறை பல வடிவங்களில் உள்ளது அதிகமாக பாதிப்புற்றவர்களுக்கு மிகுந்த அளவிலான தாக்கங்களையும் மற்றும் உடல் நலத்தையும் உளரீதியிலும் பாதிக்கின்றது.

---

**நான் வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டால், என்ன செய்ய வேண்டும்?**

சுவிசில் வீட்டு வன்முறை தடைசெய்யப் பட்டது மற்றும் தண்டனைக்குரியது. நீங்கள் அதற்கு எதிராக தடையை மேற்கொள்ளலாம்:

- நீங்கள் ஒத்துழைப்பு மற்றும் உதவிகளை ஆலோசனை நிலையங்களில் தேடுங்கள்.
  இவைகள் பற்றி அறிந்து கொள்வது மற்றும் தனிப்பட்ட முறையில் மற்றும் சட்டாரீதியான கேள்விகள் குறித்து ஆலோசனை பெறுங்கள்.
  ஆலோசனை இலவசமானது மற்றும் நம்பிக்கையானது
- நீங்கள் வீட்டில் பாதுகாப்பற்ற நிலையை உணர்வீர்களானால், –உங்கள் பிள்ளைகளுடன்– உங்கள் வீட்டைவிட்டு வெளியேறுவதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.
  பெண்களுக்கான இல்லங்கள் மற்றும் வேறு பாதுகாக்கும் நிலையங்கள் தற்காலிகமாக உங்களுக்குப் பாதுகாப்பு மற்றும் ஆலோசனை வழங்கும்.
- அவசரத் தேவைகளின்போது பொலிசை அழையுங்கள் தொலைபேசி இல. 117.
  வன்முறையை நிறுத்தவும்

---

**பொலிஸ் வந்தால் என்ன நடக்கும்?**

பொலிசார் முதலாவதாக வன்முறையை நிறுத்துவதுடன் ஆயுதம் பாவித்திருந்தால் அதை பறித்தெடுப்பர். அவர்கள் விளக்கத்தைப் பெறுவதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பர்:

- அவர்கள் வன்முறை செய்பவரையோ அல்லது வன்முறையால் பயமுறுத்தும் நபரையோ பல நாட்களுக்கு வீட்டிலிருந்து வெளியே அனுப்பலாம் மற்றும் அவர்களை வீட்டில் நுழைவதை தடைசெய்யலாம் (வெளியேற்றல்).
- அவர்கள் வன்முறை பாவிக்கும் நபரை தற்காலிகமாக கைதுசெய்யலாம் மற்றும் பின்பு ஒரு உத்தரவிடுதலை செய்யலாம்.
- அவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு (பாதிக்கப்பட்டவர் மற்றும் வன்முறையை செய்த நபருக்கு) அவர்கள் வாழும் இடத்திலே அவர்களுக்கு இருக்கும் உரிமைகள் மற்றும் ஆலோசனை நிலையங்கள் குறித்து அறியத்தருவர்.

---

**நான் வன்முறை செய்பவனாக இருந்தால், என்ன செய்ய முடியும்?**

வன்முறை தண்டனைக்குரியது மற்றும் இது உங்களுக்கும் உங்கள் உறவினர்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது– நீங்கள் இதற்கு எதிராக சிலவற்றை செய்துகொள்ளலாம்:

- நீங்கள் உதவிகள் மற்றும் ஒத்துழைப்புகளை விசேடமாக இப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஆலோசனை நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் அல்லது குடும்ப வைத்தியரை நாடுங்கள்.
- உங்கள் உணர்வுகள் குறித்து அருகில் இருக்கும் நபர்களுடன் கதைத்துக் கொள்ளுங்கள்.

---

**எனது அயலில் வன்முறை நடைபெறுகிறது என்று தெரிந்தால் நான் என்ன செய்ய முடியும்?**

இதற்கு துணிவு தேவை, ஒருவர் இன்னொருவரின் தனிப்பட்ட விடயங்களில் தலையிடுவதற்கு. இருப்பினும் இதில் அக்கறை எடுத்து ஈடுபடுவது முக்கியமாகின்றது.

- அவசரத் தேவைகளின்போது பொலிசாருக்கு அறிவியுங்கள் தொலைபேசி 117.
- இதில் நீங்கள் தலையிடுவதன் மூலம் உங்களை நீங்கள் பாதிப்புக்கு உட்படுத்திக் கொள்ளாதீர்கள்
- வன்முறையால் பாதிப்புக்குள்ளான நபரை நீங்கள் தனியாக சந்திக்கும்போது கதைத்துக் கொள்ளுங்கள்.
  விளங்கிக்கொள்வதாகவும்உ ணர்வுகளைப் புரிந்துகொள்வதாகவும் நீங்கள் காட்டிக்கொள்ளுங்கள்.
  நீங்கள் அவர்களுக்கு, சுவிசில் உதவுவதற்குத் தயாராக உள்ள அமைப்புகள் பற்றியும் வீட்டு வன்முறை இங்கு தடைசெய்யப்பட்டுள்ளமை பற்றியும் தெரிவியுங்கள்.
- தேவைப்படின் நீங்களாகவே சென்று ஆலோசனை நிலையங்களில் உதவி மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

---

**Polizeinotruf 117**
பொலிஸ் அவசர அழைப்பு
எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம

**Sanitätsnotruf 144**
வைத்திய தேவைக்கான அவசர அழைப்பு
எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம

**Frauenhaus**
பெண்கள் இல்லம
041 360 70 00
எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம
www.frauenhaus-luzern.ch

**Opferberatungsstelle**
பாதிக்கப்படுபவர்களுக்கான ஆலோசனை நிலையம

Luzern 041 227 40 60
www.disg.lu.ch/opferberatung

Nidwalden 041 618 44 82
www.nw.ch

Obwalden 041 666 64 62
www.ow.ch

Schwyz / Uri 0848 82 12 82
www.sz.ch, www.ur.ch
www.arth-online.ch/opferhilfe

Zug
041 725 26 50 www.eff-zett.ch
041 728 80 80
www.triangel-zug.ch

**Jugendberatungsstellen**
இளைஞர்களுக்கான ஆலோசனை நிலையம
www.no-zoff.ch, www.tschau.ch

**Pro Juventute 147**
பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கான அவசர அழைப்பு, www.147.ch

**Die Dargebotene Hand 143**
உதவி வழங்கும் கரம
எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள முடியும்
www.143.ch

**agredis.ch**
078 744 88 88
வன்முறையில் ஈடுபடும் ஆண்களுக்கான ஆலோசனை

**Vollzugs- und Bewährungsdienste des Kantons Luzern**
மறியற்சாலையில் உள்ளவர்கள் மற்றும் நன்நடத்தையில் உள்ளவர்களுக்கான கன்ரோன் லுசோர்னின் சேவை
041 228 59 66

வன்முறையில் ஈடுபடும் பெண்களுக்கான ஆலோசனை

**FABIA**
041 360 07 22
வெளிநாட்டவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் ஒத்துழைத்து முன்னேற்றுதல

அல்லது நீங்கள் வசிக்கும் இடத்திலுள்ள சமூகசேவை நிலையத்தை நாடுங்கள